# பொதுக்காலம் 15ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

இறைஇயேசுவில் அன்பிற்குரியவர்களே, இன்று பொதுக்காலம் 15ம் ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள்.

“நரிகளுக்கு பதுங்குக் குழிகள் உண்டு: வானத்துப் பறவைகளுக்கு கூடுகள் உண்டு, ஆனால் மானிட மகனுக்கோ தலைசாய்க்கக் கூட இடமில்லை” என பிறப்பு முதல் இறப்பு வரை தனக்கென எதுவுமில்லாமல்; எளிய வாழ்வு வாழ்ந்த இயேசு, இன்று தன் சீடர்களையும் எளிய வாழ்வு வாழவும், இலட்சிய வாழ்வில் எந்த இடையூறு வந்தாலும், அதைப் பொருட்படுத்தாது தொடர்ந்து தன் இலட்சியத்தை கண்முன் கொண்டு பயணிக்க வேண்டுமெனவும் கற்றுக் கொடுக்கின்றார். திருமுழுக்கு யோவான் ஒட்டக முடியாலான ஆடையும், வெட்டுக் கிளியும், காட்டுத் தேனும் உண்டு எளிய வாழ்வையே வாழ்ந்தார். இன்று மக்களிடையே எளிமை என்ற வார்த்தை கூட நலிந்து, மெலிந்து ஏளனத்துக்குரியதொன்றாகப் போய்விட்டது. ஆடம்பரம், பகட்டான வாழ்வு என இன்றைய கலாச்சாரம் முற்றிலுமாக மாறிப் போய்க் கொண்டிருக்கிறது. மற்றவர்களைப் போல் தாங்களும் ஆடம்பரமாக வாழ வேண்டும், இல்லையென்றால் அவர்கள் முன் தங்களது மதிப்பு, கௌரவம் குறைந்து போய்விடும் என்று அந்தஸ்து பார்த்து, தன்னிடம் இல்லையென்றாலும் கடன் வாங்கியாவது தன் மதிப்பை காப்பாற்றிக் கொள்ளும்; உயர்வு மனநிலையே மிகுந்து காணப்படுகின்றது. பின்னர் வாங்கிய கடனை திரும்ப, கொடுக்க இயலாமல், குடும்பமே தற்கொலை செய்து கொள்ளும் அவலநிலை இன்று அதிகமாக அரங்கேறிக் கொண்டிருக்கின்றது. புனித அசிசியார், அன்னை தெரசா......போன்ற பலரும் இயேசுவின் வார்த்தையை பின்பற்றி எளிய வாழ்வையே வாழ்ந்தனர். பெருந்தலைவர் காமராசர் முதலைமைச்சராக இருந்து, இறந்தபோது அவரிடம் இருந்தது ரூ.150ம் நான்கு வேட்டிகளும் நான்கு சட்டைகளுமே. எளிமை நம் உள்ளத்திலும் ஒளிர வேண்டும்.

“எந்த ஊராவது உங்களை ஏற்றுக் கொள்ளாமலோ, செவிசாய்க்காவிட்டாலோ, நீங்கள் அங்கிருந்து வெளியேறும்போது உங்கள் கால்களில் உள்ள தூசியை உதறி விடுங்கள்” என்றார் இயேசு. சீடர்களின் இலட்சிய பயணத்தில் உறவுகளோ, உடைமைகளோ எந்த விதத்திலும் தடையாக இருக்கக் கூடாது, எதையும் தூசியாக நினைத்து, உதறி விட்டு இலட்சியப் பாதையில் பயணப்பட வேண்டுமெனப் பணிக்கின்றார். நமக்கும் அத்தகைய அழைப்பையே விடுக்கின்றார். நாமும் அவர் கற்றுத் தரும் பாதையில் எளிய மனம் உள்ளவர்களாகவும், எளிய வாழ்வு வாழவும், நம் இலட்சியங்களில் எதைக் கண்டும் தேங்கி விடாது, முடங்கி விடாது தொடர்ந்து முன்னேறிச் சென்று, அவர் கண்ட இறையாட்சி கனவை இகமெல்லாம் நனவாக்கிட அருள் வேண்டுவோம் இப்புனித கல்வாரி திருப்பலியில்.

## முதல் வாசக முன்னுரை: ஆமோஸ் 7:12-15

அழைக்கப்பெற்றவர்களே, இன்றைய முதல் வாசகம், பெத்தேலின் குருவாகிய அமட்சியா ஆமோஸ் இறைவாக்கினரை வேறிடத்துக்கு சென்று இறைவாக்கு உரைக்க கோரும் நிகழ்வை எடுத்துரைக்கிறது. இஸ்ரயேலில் இறைவாக்கு உரைக்க ஆண்டவரே தன்னை அனுப்பியதாக ஆமோஸ் துணிவுடன் பதிலளிப்பதை இங்கு காண்கிறோம். இறைவனின் பணியினைநாமும் துணிவோடு ஆற்ற வரம் வேண்டி, இந்த வாசகத்துக்கு செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை: எபேசியர் 1:3-14

அழைக்கப்பெற்றவர்களே, இன்றைய இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் பவுல், நாம் கடவுளுக்காக கிறிஸ்துவின் வழியாக தேர்ந்தேடுக்கப்பட்டிருப்பதை நினைவூட்டுகிறார். இயேசு நமக்காக சிந்திய இரத்தத்தால் நாம் மீட்பு அடைந்துள்ளோம் என்பதை அவர் தெளிவுபடுத்துகிறார். கிறிஸ்துவின் தலைமையில் அனைத்தையும் ஒன்று சேர்க்க உழைக்கும் வரம் வேண்டி, இந்த வாசகத்துக்கு செவிமடுப்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

“இதோ என் ஊழியர்: நான் தேர்ந்து கொண்டவர் இவர், அவரால் என் நெஞ்சம் பூரிப்படைகின்றது” என்ற இறைவா,

எம் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் அனைவரையும் நீரே நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் உம்மைப்போல நல்ல ஆயனாக இருந்து மக்களை வழிநடத்திச்செல்லவும், தங்கள் இலட்சியப் பாதையில் சோர்ந்து, தளர்ந்து போகாது, பணியினைத் தொடர அவர்களுக்கு உம் வல்லமையையும், ஆற்றலையும் தந்தருளும். உம் பணிக்காக அனைத்தையும் தியாகம் செய்த அவர்களை நீர்தாமே அம்மையப்பனாக இருந்து, உம் அன்பு, ஆறுதல், அரவணைப்பு, மற்றும் பாதுகாப்பைத் தந்து, நீர் அவர்களின் பூரிப்படைகின்ற இறைபணியாளராக உம் அன்புப் பணிதனை அவனியிலே உறுதியுடன், துணிவுடன்; தொடர்ந்திட வரமருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

“சோர்ந்த உள்ளங்களுக்கு நான் புத்துயிர் அளிப்பேன்” என்ற இறைவா,

வாழ்வில் பல்வேறு பிரச்சனைகளினால் துன்புற்று, தங்கள் வாழ்வையே முடித்துக் கொள்ளும் மனநிலையில் இருக்கும் மாந்தர்களை கண்ணோக்கியருளும். அவர்கள் மனதிலிருந்து அத்ததைய தவறான மனப்போக்கினை மாற்றி, அவர்களின் உள்ளத்திற்கு புத்துயிர் அளித்தருளும். அவர்களின் பிரச்சனைகளிலிருந்து விடுவித்து அவர்கள் மகிழ்வுடன் வாழ அருள் புரிந்தருளும். நல்ல சமாரியராகிய உம்மைப் போல எங்கள் அடுத்திருப்பவருக்காக எஙகளை அர்ப்பணித்து, அவர்களின் தேவையறிந்து, எது நல்லதோ, எது உகந்ததோ அதை செய்திடக்கூடிய நன் மனதினைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

“கடும் உழைப்பு எப்போதும் பயன்தரும்” என்ற இறைவா,

உடல்ரீதியாகவும், அறிவுரீதியாகவும் உழைக்கின்ற மாந்தர்களை உம்மிடம் ஒப்புக் கொடுக்கின்றோம். அவர்களின் உழைப்பை ஆசீர்வதியும். உழைக்கின்ற மாந்தர்கள் பலர் தங்கள் உழைப்புக்கேற்ற ஊதியமின்றி, சுரண்டப்படும் அவல நிலையை மாற்றும். உடல்ரீதியாக உழைக்கும் மாந்தர்களை தாழ்வாக, இழிவாகக் கருதும் உயர்வு, தாழ்வு மனநிலைகளை மாற்றி, அனைவரையும் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாந்தர்களாகக் கருதிடவும், உழைப்பின் மேன்மை உணராமல்; சோம்பித் திரிந்து, பிறர் உழைப்பில் வாழும் மாந்தர்களின் மனநிலையை மாற்றி, சோம்பல் வறுமையையும், பல சீர்கேட்டையும் உண்டாக்கும் என்பதை உணர்ந்து, அவர்களும் உழைத்து வாழக்கூடிய மனதினைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

“மலைகள் நிலை சாயினும், குன்றுகள் இடம் பெயரினும் உன்மீது நான் கொண்ட பேரன்போ நிலை சாயாது” என்ற இறைவா,

அன்று பாலைநிலத்தில் பகலில் மேகத்தூணாகவும், இரவில் நெருப்புத்தூணாகவும் மக்களை வழிநடத்தி, அவர்கள் உண்ண காடையையும், பாறையிலிருந்து நீரையும் பருகக் கொடுத்த உம் மேலான தாயன்பினை என்றும் மறவாமல், உண்மை இறைவனாகிய உம்மையே நாங்கள் எங்கள் வாழ்வில் முழுமுதற் கடவுளாக முதலிடம் கொடுத்து, உம் அன்பிற்கு நன்றியுள்ளவர்களாக, உம்மை முழுமையாக விசுவசித்து வாழந்திடவும், உம் அன்பை உணராமல் உம்மை விட்டு பிரிந்து சென்ற மாந்தாகள் உம்மிடத்திலே மீண்டும் வந்து சேர்ந்திடவும், உம் அன்பைப் பெற்ற நாங்கள், அதை பிறர் ;வாழ்வில் பிரதிபலித்து, உமக்குகந்த சாட்சியாக வாழ்ந்திடவும் வரமருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

“நலம் தரும் திட்டம் வகுப்போர் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவர்” என்ற இறைவா,

எம் நாட்டை ஆளும் தலைவர்கள், தங்களுக்கு வாக்களித்த மக்களை ஏமாற்றாது, தங்கள் தலைமுறைக்கு சொத்து சேர்த்து வைக்கும் சுயநல மனமன்றி, நீதி, நேர்மை, உண்மையை பின்பற்றி, கடமை மற்றும் பொறுப்புணர்வோடு பணியாற்றி, மக்களுக்கு என்றும் பிரமாணிக்கமுள்ளவர்களாகவும், மக்களுக்கு பலன் தரும் நல்ல பல திட்டங்களை வகுத்து, வகுத்த திட்டங்களை நன்கு செயல்படுத்தி, ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத் தரம், கல்வி, சுகாதாரம், பொருளாதார நிலையினை உயர்த்தி அவர்கள் வாழ்வு ஏற்றம் காணும் வகையில், பொதுநல நோக்குடன் உழைக்கக் கூடிய உயர்ந்த உள்ளம் உள்ளவர்களாக, மக்களின் அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய நல்ல தலைவர்களாக, நல்ல முன்மாதிரியாக திகழ்ந்திடவும் வரமருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.